[Sri V. Sankaran] [8th April 1958

அப்படியில்லாமல் அன்றுடம் வாங்குவதென்றுல் அது என்றைக்கும் தீராத ஒரு பிரச்னேயாக, போகப் போக வளர்ந்துகொண்டே போகக் கூடிய பிரச்னேயாகவும் இருக்கும்.

ஆரம்பப் பள்ளி சம்பந்தமாக ஒரு மைல் ரேடியஸ்ஸுக்குள் இன்னெரு பள்ளிக்கூடம் இருக்கக்கூடாது என்று இருக்கிறது. முனிசிபல் நகரங்களில் அந்த விதி தளர்த்தப்படவேண்டும்.

பாடப் புத்தகங்கள் வெளியிடும்போது, அரசாங்கம் வெளியிட்டாலும் சரி, தனிப்பட்டோர் வெளியிட்டாலும் சரி அது பற்றி நான் ஒரு யோசனே கூற விரும்புகிறேன். கான்வென்ட் பள்ளிக்கூடங்களில், பரீட்சை முடிந்த ஒரு வாரத்திற்குள்ளேயே முடிவை அறிவித்துவிட்டு, அடுத்த வருஷத்திற்கான பாடப் புத்தகங்களேத் தயாராக வைத்துக்கொண்டிருக்கிறுர்கள். அந்தந்த பள்ளிக்கூடங்களிலேயே புத்தகக் கடை வைத்துக்கொண்டிருக்கிறுர்கள். பரீட்சை நடந்த ஒரு வாரத்திற்குள்ளேயே புத்தகங்களேத் தயாராக வைத்துக்கொண்டிருப்பதனுல் உடனே வாங்கிக்கொண்டு, விடுமுறைக் காலங்களில் படித்துக்கொள்வதற்கு வசதியாக இருக்கும்; கான்வென்ட் பள்ளிக்கூடங்களில் இருக்கும் இம்முறையை நாம் மற்றப் பள்ளிக்கூடங்களிலும் கையாண்டால் நன்ருக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

எழ்மை நிலேயில் உள்ளவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பது பாராட்டத் தக்கது. ஹரிஜனங்களாக இருந்து கிறிஸ்துவ மதத்திற்கு மாறியவர்களுக்கும் இப்பொழுது கல்விச் சலுகை விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது, ஸ்காலர்ஷிப்பும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவர்கள் என்ற முறையில் அவர்கள் எற்கெனவே மிஷனரிகளிடமிருந்து ஓரளவு நன்மை அடைந்து வருகிறுர்களா, சலுகை பெறுகிறுர்களா ? அப்படிப்பட்டவர்களுக்கே அரசாங்கம் மீண்டும் இத்தகைய சலுகைகளே அளித்துக் கொண்டிருக்கிறதா ? இம்மாதிரி இரண்டு வழிகளிலும் நன்மை பெறுகிறுர்களா என்பதை அரசாங்கம் ஆலோசிக்க வேண்டும். ஒரே சமயத்தில் இரண்டு இடங்களிலும் சலுகை பெறலாம் என்ற நிலேமைக்கு இடம் அளிக்கக்கூடாது. கிறிஸ்தவர்களாக மதம் மாறிய ஹரிஜனங்கள் விஷயத்தில் நன்ருக பரிசீலிக்க வேண்டும். இல்லாவிட்டால் இரண்டு இடங்களிலும் சலுகை பெறும்படியான நிலேமை எற்படும். அந்த விதமான தப்பு செய்வதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, எல்.டி. பயிற்சி பெற்ற உபாத்தியாயர்களுக்கு பென்ஷன் திட்டம் இருக்கிறது. அது யோசிக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. அதையும் சீக்கிரம் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

III.—ANNOUNCEMENTS BY THE HON. THE SPEAKER—*cont.*

(4) COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

MR. SPEAKER : I have to announce to the House that under Rule 196 (1) of the Madras Legislative Assembly Rules I have nominated the following Members to serve on the Committee on Subordinate Legislation :—

Sri R. Srinivasa Iyer.

Sri S. Lazar.

Sri T. T. Daniel.

Srimathi A. Suares.

Sri A. R. Subbiah Mudaliar.

Sri M. D. Ramasami.

Srimathi Dr. Sathiyavanimuthu.

Sri K. Vinayakam.
The Hon. Sri C. Subramaniam.
Sri S. Nagaraja Monigar.

Under Rule 197 of the Assembly Rules I nominate Sri R. Srinivasa Iyer to be the Chairman of the Committee.

VI.—BUDGET FOR THE YEAR 1958–59—VOTING OF DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1958–59—*cont.*

DEMAND XV—EDUCATION—*cont.*

Sri P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கல்வித் துறைக்கென நாம் பட்ஜெட்டிலே ஒதுக்கியிருக்கும் பணம், ஒரு கணிசமான தொகைதான் என்பதிலே ஐயமில்லை. ஆனால் இவ்வாறு ஒரு கணிசமான தொகையைச் செலவழிப்பதற்குரிய முழுப் பயனையும் அடையவேண்டுமானால், ஆசிரியர்களுடைய தரத்தை உயர்த்தவேண்டும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்களுடைய தரம் உயரவேண்டும் என்று நான் குறிப்பிடும்போது, அவர்களுடைய வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்தாலொழிய, அவர்களுடைய கவனம் பெரிதும் இந்தக் கல்வித் தரத்தை உயர்த்துவதிலே செலுத்துவதற்கு இருக்காது, என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டிலும் ஆசிரியர்களுடைய குறைகளைக் குறித்து இந்தச் சபையிலே பேசப்பட்டு வருகிறது. இந்த ஆண்டிலேயேயும் ஆசிரியர்களுடைய குறைகளைத் நிவர்த்தி செய்யவேண்டுமென்று அங்கத்தினர்கள் பலர் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு ஆரம்ப ஆசிரியர்களுடைய குறைகளைக் குறித்து பல அங்கத்தினர்கள் இந்தச் சபையிலே மீண்டும் நினைவுபடுத்தியிருப்பது கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்தை கவரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

சில தினங்களுக்கு முன்னால் ஆரம்ப ஆசிரியர்கள் ஒரு பெரும் ஊர்வலமாக பல பாகங்களிலிருந்து புறப்பட்டு, சென்னை நகரத்திற்கு வந்து மக்கள் முன்னால் தங்களுடைய குறைகளை எடுத்து விவரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்பதையும் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். ஆசிரியர்கள் தங்களுடைய கோரிக்கை அட்டைகளை ஏந்திக்கொண்டு ஊர் ஊராகச் செல்ல வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் கவனிக்கத் தவறினால், நம்முடைய கடமையிலிருந்து தவறியதாகத்தான் ஆகும் என்று நான் குறிப்பாக வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஆரம்ப ஆசிரியர்கள் இவ்வாறு ராஜ்யமெங்கும் பெரும் கிளர்ச்சியிலே ஈடுபடுவதற்கு ஒரு நிர்ப்பந்தம் ஏற்படுமானால் அதற்குரிய காரணங்களையும் கண்டு, அவைகளைக் களைந்தெறிவதற்கு நாம் உண்மையாகவே முயற்சிக்க வேண்டும் என்று இந்த இலாகாவை நிர்வகிக்கக் கூடிய அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏதோ தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்வதைப்போல் என்று கருதி அலட்சியமாக இருந்துவிடக்கூடிய நிலைமை ஏற்படக் கூடாது. அவர்களுக்கு வேறு யாரும் இல்லை. நாம்தான் இருக்கிறோம். மக்கள் இருக்கிறார்கள். மக்களுடைய பிரதிநிதிகளாக சட்டசபை அங்கத்தினர்களும் அமைச்சர்களும் இருக்கிறார்கள். அரசாங்கமே ஆரம்ப ஆசிரியர்களை சரிவர நடத்துவதற்கு தவறினால் இவர்கள் எப்படி பிறர் இடத்திலே போய், அவரவர்கள் தொழிலாளர்களை சரிவர நடத்த வேண்டுமென்றும் அவர்களுக்கு ஜீவனச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்றும் குறிப்பிடுவதற்கு முடியும் என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

ஆரம்ப ஆசிரியர்கள் தங்களுடைய சாதாரண வாழ்க்கையை நடத்துவதற்குக்கூட போதிய வருமானம் இல்லாத நிலைமையிலே அல்லல் உறுகிறார்கள் என்றால், அவர்கள் எப்படி நல்ல பிரஜைகளைத் தோற்றுவிக்க தங்கள் முழு கவனத்தையும் செலுத்த இயலும் என்று கேட்கின்றேன். ஆசிரியர்களுடைய இந்தக் குறையை நாம் போக்குவதற்கு